BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் (Service Brampton) அமைப்பானது குடியிருப்புவாசிகளுக்கான சேவையை மேம்படுத்த, எட்டிப்பார்க்கும் அறிவிப்புக்கள் கொடுக்கத் துவங்கியுள்ளது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 27, 2022) – சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் அமைப்பானது ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகளுக்கு சேவையளிப்பதில் மேம்பாடுகளைத் தொடர்ந்து செய்து வருகிறது; அதாவது 311brampton.ca மற்றும் 311 மொபைல் செயலி உபயோகிப்பவர்களுக்கு எட்டிப்பார்க்கும் அறிவிப்புக்கள் கொடுப்பதை இன்றிலிருந்து துவக்குகிறது.

குடியிருப்புவாசிகள் தாங்கள் சமர்ப்பித்த சேவைக்கான வேண்டுகோளை, அதனை சமர்ப்பித்த தேதியிலிருந்து, அவ்வப்போதைய நிலை என்ன என்பது முதல் அது நிறைவேறும் வரையிலானவை பற்றிய *எட்டிப்பார்க்கும்* அறிவிப்புக்களைப் பெற தாங்களே விருப்பத்தெரிவு செய்துகொள்ளலாம். குடியிருப்புவாசிகள் 311 அணியைத் தொடர்பு கொள்ளாமலேயெ தங்களின் சேவை வேண்டுகோள் எந்த நிலையில் உள்ளது என அறிந்துகொள்ள இது உதவும்.

**சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் (Service Brampton) இன் 311 மொபைல் செயலி மற்றும் வலைத்தளம்**

இந்த 311 மொபைல் செயலி மற்றும் ஆன்லைன் வேண்டுகோள்கள் தகவல்கள், சமர்ப்பணங்கள் மற்றும் வேண்டுகோளின் தடம் அறிதல் ஆகியவை கீழ்க்கண்ட சேவைகளுக்கு எளிதில் கிடைக்கும்:

- வாகன நிறுத்த சேவைகள் மற்றும் அவற்றுக்கான நடமாட்ட உரிமம் அளித்தல்
- சொத்து பற்றிய கவலைகள் மற்றும் நகராட்சி விதி அமலாக்கம்
- குப்பைகள் மற்றும் விளம்பர பலகைகள்
- பூங்காக்கள் நடை தடங்கள்
- சாலைகள் மற்றும் பக்கவாட்டுப் பாதைகள்
- சாலைக்குறிகள் மற்றும் தெருவிளக்குகள்
- மரங்கள் தொடர்பான சேவைகள்
- ப்ராம்ப்ட்டன் ப்ளவ் ட்ராக்கர் (Brampton Plow Tracker) மற்றும் பனி அகற்றும் சேவைகள்

இந்த 311 ப்ராம்ப்ட்டன் செயலியை இன்றே ஆப் ஸ்டோர் (App Store) அல்லது கூகிள் ப்ளே (Google Play) வழியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். குடியிருப்புவாசிகள் இந்தப் புதிய தடம் அறியும் அம்சத்தினை 311brampton.ca யிலும் உபயோகிக்கலாம்.

**இணைப்பிலேயே இருங்கள்**

ஸ்மார்ட்ஃபோன், ஆன்லைன் அல்லது 311 ஐ அழைத்தல் ஆகிய முறைகளில் சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் -ஐ விரைவாகவும் எளிதாகவும் அடைய முடியும். வாடிக்கையாளர் சேவை ஒரு நாளின் 24 மணி நேரமும், வாரத்தின் ஏழு நாட்களும், 150 மொழிகளுக்கும் மேலாகவுஉம் கிடைக்கிறது.

- ஆன்லைனில் க்கு 311Brampton.ca வருகை தரவும்
- ஆப் ஸ்டோர் (App Store) அல்லது கூகிள் ப்ளே (Google Play) யில் 311 Brampton செயலியை தரவிறக்கம் செய்துகொள்ளவும்
- ப்ராம்ப்ட்டன் நகர எல்லைக்குள் என்றால் 311 ஐ சுழற்றவும் (நகர எல்லைக்கு அப்பால் 905.874.2000)
- 311@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யவும்

சேவைகளை கோருவதற்கும், பொழுதுபோக்கு நிகழ்சிகளுக்கான பதிவுசெய்தல், வாகன நிறுத்த டிக்கெட் பணம் செலுத்தல்கள் மற்றும் ரொக்கம் இல்லாமல் வரி செலுத்துதல்கள் உள்ளிட்ட பல்வேறு பரிவர்த்தனைகளை நிறைவேற்றிக்கொள்ள குடியிருப்புவாசிகள் நகரம் முழுவதும் உள்ள சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் அமைந்துள்ள இடங்களுக்கு தங்கள் வசதிப்படி வருகை தரலாம். இது அமைந்துள்ள இடங்கள்:

- நகர் மன்றம்
- ப்ராம்ப்ட்டன் சிவிக் மையம்
- சூஸன் ஃபென்னல் ஸ்போர்ட்ஸ்ப்ளெக்ஸ்
- கேஸ்ஸீ கேம்ப்பெல் சமுதாய மையம்
- கோர் மெடோஸ் சமுதாய மையம்

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் நன்றாக நிர்வாகிக்கப்படும் நகரமாகும், மற்றும் நமது சமூகத்திற்கு சிறந்த சேவை செய்வதற்காக எங்கள் அன்றாட நடவடிக்கைகளை தொடர்ந்து மேம்படுத்துவதில் நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். 311brampton.ca மற்றும் 311 மொபைல் செயலியில் தேடிக்கண்டறிந்து, தங்களின் அனைத்து நகராட்சிப் பணி தேவைகளுக்கும் எங்கள் குழுவைத் தொடர்புகொள்ளுமாறு நான் குடியிருப்புவாசிகளை ஊக்குவிக்கிறேன். 24/7 என்னும் அடிப்படையில் உங்களுக்கு சேவை செய்யவே நாங்கள் இருக்கிறோம்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நமது சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் குழுவானது நமது குடியிருப்புவாசிகளுடனான ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும், நமது சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, நாங்கள் வழங்கும்

சேவைகளை நெறிப்படுத்துவதற்கும் புதிய வழிகளைத் தொடர்ந்து கண்டுபிடித்து வருகிறது. புதிய "*எட்டிப்பார்க்கும்*" அறிவிப்புகள் குடியிருப்புவாசிகளின் சேவைக் கோரிக்கைகளைப் பற்றிய புதுப்பித்த தகவல்களைக் கொண்டிருக்கும்; இதன்மூலம் அவர்களுக்கான சேவைக்காக ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதிலும் நாங்கள் எங்கு இருக்கிறோம் என்பதை அவர்கள் அறிவார்கள்."

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5 தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரில், நமது குடியிருப்புவாசிகளுக்கு சிறப்பான மற்றும் வசதியான சேவைகளை வழங்கவும், அவர்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தவும் நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். எங்கள் அர்ப்பணிப்பு மிக்க சர்வீஸ் பிராம்ப்டன் குழு எப்போதுமே, எந்த வழியில் மிகவும் வசதியானதோ அப்படியான முறையில் அவர்களின் சேவைக்காக இருக்கும்; இது ப்ராம்ப்ட்டன்வாசிகளுக்கு உதவவும் அவர்களுக்குத் தெரிவிக்கவுமேயாகும். புதிய 311 *எட்டிப்பார்க்கும்* அறிவிப்புகள் அந்த அனுபவத்தை மேம்படுத்தும்;, குடியிருப்பாளர்களுக்கு விரைவாகவும் திறமையாகவும் நாங்கள் பணியாற்றும் அதே வேலையில் சரியான நேரத்தில் அவர்களுக்கான புது தகவல்களையும் வழங்கும்."

*- சார்மெயின் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 7 & 8 , துணைத் தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரத்தில் உள்ள எங்கள் குழுவானது, கவுன்சில் கால முன்னுரிமைகொண்ட விஷயங்களை வழங்கிவிட உறுதிபூண்டுள்ளது: ப்ராம்ப்ட்டன் மிக நன்றாக நிர்வகிக்கப்படும் நகரமாகும்; இதில் சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் ஒரு ஒருங்கிணைந்த பங்கை வகிக்கிறது. 311 இணையதளம் மற்றும் 311 மொபைல் செயலியில் *எட்டிப்பார்க்கும்* அறிவிப்புகளை வழங்குவதற்காக, எங்கள் சேவையை மேம்படுத்துவதன் மூலம், எங்கள் குடியிருப்புவாசிகள் தங்களின் கோரிக்கைகளுக்கான தகவல்களைப் பெறலாம்; இதற்காகவே நாங்கள் பணிபுரிகிறோம்."

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக்

கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சர ஊடகம்
multiculturalmedia@brampton.ca